தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்
மலர் 1] [இதழ் 168

# நம் நாடு

[illegible] தினஇதழ் [illegible] அண்ணாதுரை

"The Nam Nadu" A Tamil Daily : The Official Organ Of : The D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: மார்கழி 11, [illegible] (26—12—53) ★ ★ ★ வெளியீடு: மார்கழி 12உ ஞாயிறு (27—12—53)


# ஜாதிப் பாகுபாடே இந்தியாவை அடிமை ஆக்கியது!

—(:)—

## எவர் முன்னேற்றத்திற்கும் தடையாக ஏழ்மையும், ஜாதியும் இருக்கக்கூடாது

—(:)—

## உழவர்களுக்கே வயலும், வாய்க்காலும் உரிமையாக வேண்டும்

### மனிதனை மனிதன் சுரண்டப்படா நிலையைக் காண்பதே என் விருப்பம்

### ஜெகஜீவன்ராமின் உள்ளக் கிடக்கை

"ஒருவரை ஒருவர் சுரண்டி வாழ்வதற்கு இடமற்ற ஒரு சமுதாயத்தையும், உடலுழைப்பை இகழும் நிலை மாறி, பாராட்டவும், கண்ணியப்படுத்தவும் மனமாற்றம் பெற்றுள்ள ஒரு சமுதாயத்தையும் நான் காணவேண்டுமென்று பெரிதும் விழைகிறேன்."

"உழுபவனுக்கே நிலம் உரிமையுடையதென்பதிலும், அவன் உழைப்பின் முழுப் பலனையும் அடைய உரிமை அவனுக்கே உண்டு என்பதிலும் இந்திய சர்க்கார் தனது கொள்கை இணைத்துக் கொண்டு இருக்கிறது. இதற்கு எதிர்நிச்சு அடிப்பவர்கள், கண்டிப்பாக அழிந்து போவார்கள் என்பது நிச்சயம்."

"இந்தியாவின் வீழ்ச்சிக்கு மூலகாரணமாக இருந்த, கேலிக்குரிய ஜாதி பாகுபாட்டை மக்கள் தொலைத்துத் தலைமுழுக வேண்டும். ஏழ்மையும், ஜாதியும் எவரின் முன்னேற்றத்திற்கும் குறுக்காக நிற்கக்கூடாது."

"தங்களுடைய உரிமைகளையும், தேவைகளையும் பழங்குடி மக்கள் நன்கு உணர்ந்து கொண்டுள்ளார்கள். ஆனால், சமூகத்தில் சம பங்கு பெறுவதற்கு ஒழிந்துக் குரல் எழுப்ப அவர்கள் இன்னமும் ஒன்றுபடத் தவறி விடுகிறார்கள்."

"இந்தக் காரியத்தில் மாணவர்கள் முனைய வேண்டும்."

—இவ்வாறு போபாலில், சர்க்கார் அமைதியா கல்லூரி மாணவர் சங்கத்தைத் துவக்கி வைத்து, பேசுகையில், மத்திய அமைச்சர் ஜகஜீவன்ராம் தெரிவித்தார்.

## நன்னிலம் மாணவர்களின் அறப்போர்

### இந்திப் பரீட்சை எழுத மறுத்தனர்

நன்னிலம், டிச. 25—

நன்னிலம் மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் ஆறுவது பார மாணவர்கள் நடத்திய இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி வெற்றி பெற்று விட்டது.

அண்மையில் நடைபெற்ற அரை ஆண்டுத் தேர்வில், இந்திப் பரீட்சை எழுதாத மாணவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என தலைமை ஆசிரியர் அறிவித்திருந்தார். மாணவர்கள் இதை எதிர்த்துப் போராடினர்.

இந்தித் தேர்வு நடக்கவிருந்த 22-ந் தேதியன்று மாணவர்கள் அனைவரும் பள்ளிக்கு வந்திருந்தும் பரீட்சை எழுத முடியாதென கட்டுப்பாடாகச் சொல்லிவிட்டார்கள். உடனே தலைமை ஆசிரியர் மாணவர்கள் அனைவரையும் பரீட்சை எழுத வேண்டாமெனக் கூறிவிட்டார்.

மாணவர்கள் வெற்றிப் புன்னகையுடன் வீடு திரும்பினர்.

(5-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

குறித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட [illegible] தம்பினர்மீது சாற்றப்பட்டுள்ள குற்றங்கள், வாரண்ட் இல்லாமல் போலீஸ் கைது செய்வதற்கு இடம் தருகிறது என்று குழு அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

# தமிழர்களுக்கு இடங் கொடுக்க மறுத்த வடநாட்டு வெறியர்கள்!

## சீக்கிய மாணவர்களின் மிருகச் செயல்

### இந்தியக் கலாச்சாரக் கோட்டை தகர்கிறது!

குடியாத்தம், டிச. 25—

சென்னையிலிருந்து புறப்பட்டு பெங்களூருக்குப் போகும் ரயில் குடியாத்தம் ரயில் நிலையத்தை அடைந்ததும், வண்டியிலிருந்த சீக்கியர்களுக்கும், மற்ற தமிழ் பிரயாணிகளுக்கும் தகராறு ஏற்பட்டதன் விளைவாக வண்டி ஒரு மணி நேரம் தாமதித்துப் புறப்பட நேர்ந்தது.

ஐதராபாத் உஸ்மானியா எஞ்சினீயரிங் கல்லூரி மாணவர்களான மேற்படி சீக்கியர்கள், சென்னையிலிருந்து பெங்களூருக்குச் செல்வதற்காக அந்த ரயிலில் பிரயாணம் செய்தார்கள். வண்டி காட்பாடி வந்தடைந்ததும், சீக்கிய மாணவர்கள் உட்கார்ந்திருந்த வண்டியில் கணவனும், மனைவியுமாக இருவர் தங்கள் 6-மாதக் குழந்தையுடன் ஏறிக் கொண்டார்கள்.

வண்டி காட்பாடியைவிட்டுப் புறப்பட்டது. வண்டி ஓடிக் கொண்டிருக்கையிலேயே அந்த சீக்கிய மாணவர்களுக்கும், அங்கிருந்த தமிழ்ப் பிரயாணிகளுக்கும் தகராறு ஏற்பட்டது.

ரயில், குடியாத்தம் ரயில்வே நிலையத்தை வந்தடைந்ததும், வண்டியிலிருந்த சீக்கிய மாணவர்கள் அந்தப் பெண்ணின் கழுத்தைப் பிடித்துக் குழந்தையோடு வெளியே தள்ளினர். இதைக் கண்ட தமிழர்களுக்குக் கோபம் ஏற்பட்டு, சீக்கியர்களை எதிர்க்க ஆரம்பித்தனர். வாய்ச் சண்டை நடந்து கொண்டிருக்கும்போது, வண்டி ரயில் நிலையத்தை விட்டுப் புறப்பட்டது.

வண்டி கொஞ்ச தூரம் போவதற்குள் வண்டியிலிருந்த தமிழ்ப் பிரயாணிகள் அபாயச் சங்கிலியைப் பிடித்திழுத்து நிறுத்தினர்.

வண்டி நின்றவுடன், தமிழ்ப் பிரயாணிகள், அனைவரும் கீழே குதித்து, 'தகராறைத் தீர்க்காது வண்டியை நகர விடமாட்டோம்' என்று சொன்னார்கள். மீறி வண்டி புறப்பட்டால், தண்டவாளத்தில் படுத்துக்கொள்வோம்,' என எச்சரிக்கை விடுத்தனர்.

செய்தி அறிந்த ரயில் நிலைய அதிகாரி [illegible] யை மீண்டும் நிலைய [illegible] கொண்டு வரக் கூறினார்.

ஆனாலும், வேதனை தாங்க முடியாத தமிழ்ப் பிரயாணிகள், சீக்கியர்கள் இருந்த பெட்டியைத் [illegible] தாக்கினர், ஜன்னல் பலகைகள் முறிந்தன; கண்ணாடிகள் தவிடு பொடியாயின; சீக்கிய மாணவர்கள் கதவுகளைத் தாளிட்டுக் கொண்டு பெட்டிக்குள் பதுங்கிக் கொண்டனர்; என்றாலும், ஒரு சிலருக்கு இலேசான காயங்கள் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

வண்டி, மீண்டும் நிலைய மேடைக்கு வந்ததும், நிலைய அதிகாரி போலீசாரிடம் புகார் செய்ததின்பேரில், மற்ற பிரயாணிகளும் அந்தப் பெட்டிக்குள் ஏறி கொள்ளப்பட்டனர்.

இதனால் வண்டி 1-மணி நேரம் தாமதித்துப் புறப்பட்டது.

## பொள்ளாச்சியில் ஈ. வெ. கி. சம்பத்

### பொதுக் கூட்டத்தில் சொற்பொழிவு

20—12—53ல், தேர் நிலை வெளியில், தோழர் அ. ச. பாலு தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தோழர் ஈரோடு அப்பாவு பேசிய பின், தோழர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் பேசுகையில், "ஆச்சாரியார் பதவியை விட்டு விலக்கப்பட்டாலும், ஆதிக்க வெறியர் கனின் தலைமைப் பீடம்—டில்லி தேவலோகம், [illegible], இதைவிட உயர்ந்த பதவியில் நியமித்தாலும் நாம் ஆச்சரியப்படவேண்டாம் என்றும், புதிய கல்வித் திட்டம் ஆபத்தானது" என்று விளக்கியும் நீண்டதோர் சொற்பொழிவாற்றினர்.

## உட்கருவதற்கான இருப்பும் மறுப்பு

### விசேஷ மாஜிஸ்திரேட்டின் தாராளம்!

அத்தைக்குடி, டிச. 23—

22—12—53 அன்று அத்தைக்குடி சதி வழக்கில் கைதாகியுள்ள கதிரேசர் ஆர். தண்டபாணி (இரா. இளம்வழுதி) அவர்கள் மற்றும் சாட்டப்பட்டுள்ள தோழர்கள் தரையில் உட்கார்ந்து அவதிப்பட வேண்டியிருப்பதால், அவர்களுக்கு உட்கார [illegible] தர ஏற்பாடு செய்யவேண்டுமென மனுக் கொடுத்தனர்.

மாஜிஸ்திரேட் அவர்கள் மனுவின்மீது தீர்ப்புக் கூறும்போது, "துரதிர்ஷ்டவசமாக நாற்காலிகள் கிடைக்காததால், இந்த மனுவை நிராகரிக்கிறேன்", என்று கூறிவிட்டார்.

## சட்ட சபை உறுப்பினரைக் கைது செய்ய போலீசுக்கு உரிமையுண்டாம்

### உரிமைப் பிரச்னையை ஆராய்ந்த குழுவின் முடிவு

பம்பாய், டிச. 25—

பிரஜா—சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவரும், பம்பாய் சட்டசபை உறுப்பினருமான டி. எஸ். பட்டேல் அவர்களை, சோஷலிஸ்ட் கட்சியினர் சென்ற செப்டம்பர் மாதத்தில் தொடங்கிய மேய்ச்சல் நில அறப்போரின் போது, பம்பாய் போலீஸ் கைது செய்தது.

இதனால், சட்டசபை உறுப்பினர் உரிமை பாதிக்கப்பட்டிருப்பதாக சட்டசபையில் உரிமைப் பிரச்னை எழுப்பப்பட்டது.

இதை ஆராய ஒரு குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழு, போலீசின் செயலால் சபையின் வலிமையோ, உறுப்பினர் உரிமையோ பாதிக்கப்படவில்லை என்று முடிவு கூறிவிட்டது.

அந்த உறுப்பினர் கவில் இருவர், குழுவின் முடிவிற்கு எதிராக உரிமை பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற கருத்தைக்

(8-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 26—12—1953 சனி

# 'நான்சென்ஸ்!'

சென்னை சர்க்காரின் இடைக்கால கல்வி மானியம், சட்டசபை உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெற்றுவிட்டது. அமைச்சர் ஆச்சாரியார் அவர்களின் சாணக்கியம் வெற்றி பெற்றுவிட்டது.

கல்வி மானிய விவாதத்தின்போது, அமைச்சர் ஆச்சாரியாரின் ரிஷி பிண்டமான புதிய கல்வித் திட்டத்தின் கேடுகளைக் குறித்துப் பலர் விளக்கமாகப் பேசியிருக்கிறார்கள். ஆனால், அவ்வளவிற்கும் பதில் கூறப் புகுந்த அமைச்சர் ஆச்சாரியார், திட்டத்திற்கு எதிர்ப்புக் கிளம்பியதற்கு உட்பொருள் கற்பித்தும், பலதிறப்பட்ட எதிர்ப்பாளர் அனைவர் மீதும் மாசு கற்பித்தும், தாமே ஆக்கிக்கொண்ட கற்பனை உலகில் சஞ்சரித்து இருக்கிறார். ஏற்கனவே, திட்டத்திற்குத் தீவிரமாக எதிர்ப்புக் கிளம்பிய காலம் முதல், அவைகள் அனைத்துக்கும் பதிலென்று, பற்பல இடங்களிலும் எந்தெந்த வகையில் திருவாய் மலர்ந்தருளி வந்தாரோ, அவைகளில் சிலவற்றைச் சட்ட சபையிலும், எதிர்ப்பாளருக்கு மறுப்பெனக் கொட்டி அளந்திருக்கிறார். ஆனால், இரண்டுக்கும் ஒரே ஒரு மாற்றம் மட்டும் இருக்கிறது.

அந்த நாளில், அமைச்சர் ஆச்சாரியார் பேசிய பேச்சுகளில் இருந்த 'தான் எனும் அகந்தை', சட்டசபை பேச்சில் கொஞ்சம் தணிந்து இருக்கிறது. பதில் தரும் முறையில் கொஞ்சம் 'நயம்' கூட்டப்பட்டிருக்கிறது. ஆனால், அவருடைய அந்நாள் பேச்சு புலியின் சீறுதலுக்குச் சமம் என்றால், இன்றையப் பேச்சு அது பதுங்குவதற்குச் சமம் என்றுதான் அந்தப் பேச்சை அனைவரும் கொள்ளுவர்.

1937-38ல் அமைச்சர் ஆச்சாரியாரால் திணிக்கப்பட்டக் கட்டாய இந்திக்கு எதிர்ப்புக் கிளம்பியபோதும், துவக்கத்தில், மிக மிக ஆணவமாகத்தான் பேசி, கடல்போல் எழுந்த எதிர்ப்பை அடக்கிவிடப் பார்த்தார். 'ஆரிய கலாசார விரோதியான ஒரு பாரதியும், பார்ப்பன துவேஷியான ஒரு நாயக்கரும்' இந்தியை எதிர்க்கிறார்கள் என்பதற்காக தன் கட்டாய இந்தியைக் கைவிட முடியாது என்று கொக்கரித்தவர்தான் இந்த அரசியல் ஆணவக்காரர். நாள் செல்லச் செல்ல, அதே ஆச்சாரியார்தான், தொங்கிய தொனியில் பேசவும் முற்பட்டார்.

'தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்' என்று இறுதி வரை சாதிப்பதில், அவருக்கு இணை அவரேதான். 'முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா' என்னும் முதுமொழிக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டும் அவரேதான்!

ஒரு திட்டம் நியாயமானது என்பதும், அத்திட்டத்தால் பெறப்படும் பலன் விழுமியதாக இருக்கும் என்பதும், அவைகளை மெய்ப்பிக்கத்தக்கச் சான்றுகள் உள்ளன என்பதும், திட்டத்தைத் தீட்டியவரின் உள்ளமும் மாசு மருவற்றது என்பதும் உண்மையானதாக இருக்குமானால், அத்தகுச் சிறந்த திட்டத்தை, எதிர்ப்பவர்கள் காட்டும் நியாயங்களை, தக்க ஆதாரங்களுடன் மறுத்து, தனது கட்சியை நிலைநாட்டுவதுதான் முறை—போற்றத்தக்கது.

ஆனால், அமைச்சர் ஆச்சாரியாரின் விவகாரமோ அலாதி. 'தான் திருடி, அண்டை வீடு நம்ப மாட்டாள்,' என்ற பேத புத்தியை இயல்பாகவே பெற்றிருப்பவர் அமைச்சர் ஆச்சாரியார், எனவேதான், எதிர்ப்பாளர்கள், திட்டத்தில் காணும் குறைபாடுகளுக்கு, பொருந்தும் காரணங்களைக் கூறி, தமது திட்டத்தின் உயர்வை நிலைநாட்டுவதற்குப் பதில், எதிர்ப்பாளர்களுக்கு மாசு கற்பிக்க முயலுகிறார். ஆச்சாரியாரின் இந்தச் செயல், எதிர்ப்பாளர்களை மக்கள்முன் கறைபடுத்திக் காட்ட உதவக்கூடுமே ஒழிய, திட்டத்திற்கு எதிராக அவர்கள் கூறியுள்ள நியாயமானக் குறைபாடுகளை நடைமுறையிலிருந்து விலக்கிவிட ஒருக்காலும் உதவவே உதவாது. ஆச்சாரியார் சொல் கேட்டு, எதிர்ப்பாளர்களை, பொதுமக்கள் ஒதுக்கலும், ஒறுத்தலும் மலையேறிப் போய்விட்டன, ஆச்சாரியார் காட்டிய வழியில் மக்கள் இயங்கும் நிலை, இப்பொழுது, நாட்டில் அறவே கிடையாது. அவருடைய முதுமை, அதன் விளைவாக அவரிடம் ஏற்பட்டுள்ள அறிவு நிலைகுலைவு, நாட்டு மக்களின் மனப்போக்கைக் காணவும், கண்டாலும் நன்கு விளங்கிக் கொள்ளவும் முடியாமல் தவறி விடுகிறது.

தமது கல்வித் திட்டத்திற்கு ஏற்பட்ட எதிர்ப்பை, ஜாதித் துவேஷம், அரசியல் எதிர்ப்பு, அழுக்காறு, அறியாமை எனும் நான்கு பிரிவுகளாகப் பிரித்து விடுகிறார். இந்த நான்கு பிரிவுகளில், 'அறியாமை'யை, எதிர்ப்பாளர் அனைவர் மீதும் பொதுப்பழியாகச் சுமத்துகிறார். 'எல்லோரிலும் தான் சிறந்த மேதாவி' என்று, அவர் எண்ணிக் கொண்டு இருக்கும் இழிகுணத்தின் விளைவு இது!

இரண்டாவதாக, எதிர்ப்பாளர்களின் பட்டியலில் உள்ள பெருமபாலோரை 'ஜாதித் துவேஷ'க் குற்றப் பட்டியலுக்குள் சேர்க்கிறார்!

மூன்றாவதாக, 'இந்து' போன்ற பத்திரிகையின் எதிர்ப்பை 'அரசியல் பகை' என்று மாசு கற்பித்து, 'இந்து'வின் எதிர்ப்பை மிகமிகச் சாதாரணமாகக் காட்ட முயற்சிக்கிறார்!

நான்காவது குற்றம் அழுக்காறு! தம்முடைய சொந்தக் கட்சியினருக்கு அதைச் சூட்டுகிறார், அன்பர் ஆச்சாரியார்!

ஆச்சாரியார், ஒரு கல்வி நிபுணர் அல்ல 'மாடு', 'மரம்', 'கழுதை', 'குதிரை' என்று அட்டைகளில் எழுதி, அததன் மீது தொங்க விட்டுவிட்டாலே, கிராமத்தவர் கல்வி கற்றுக் கொள்வார்கள் என்று 1938-ல் திருவாய் மலர்ந்தருளிய கல்வி மேதாவிதான், அமைச்சர் ஆச்சாரியார்

தொடக்கப் பள்ளிகள், சிறார்களை, நாள் முழுதும் அடைத்து வைக்கும் சிறைக்கூடம் என்று சித்தரித்தவரும் இதே மேதாவிதான்.

இப்படியெல்லாம் தாறுமாறாகக் கல்வியைப்பற்றி உளறி வழிபவர்தான், தம்மைக் கல்விக் கண்ணோட்டம் கொண்டவர் என்று பிறரிடம் கூச்சமில்லாமல் தம்பட்டம் அடிக்கிறார். சுத்த 'நான்சென்ஸ்'!

நமது தி. மு. கழகம், திட்டத்தைக் 'கல்விக் கண்' ஒன்றை மட்டுமே கொண்டுதான் ஆராய்ந்து, எதிர்ப்பது என்று முடிவிற்கு வந்தது. எதிர்ப்பைத் தனது சக்திக்கேற்ப நடைமுறையிலும் மேற்கொண்டது அமைச்சர் ஆச்சாரியார் ஒரு பார்ப்பனக் குடிபிறந்தவர் என்பதற்காக, அவருடைய கல்வித் திட்டத்தை நமது கழகம் எதிர்க்க முன்வரவில்லை என்பது முக்காலும் உண்மையாகும். இந்த மறுக்க முடியாத உள்ளக் குமுறலை அமைச்சர் ஆச்சாரியார் ஒப்ப மாட்டார். இதை உணரப் பொதுமைப் பண்பு வேண்டும். அந்தப் பண்புக்கும் ஆச்சாரியாருக்கும் வெகு தொலைவு! பரம்பரைப் பகை!

புதிய கல்வித் திட்ட எதிர்ப்புத் துறையில், அமைச்சர் ஆச்சாரியார் நம்மீது சாட்டும் குற்றச்சாட்டுக்குத் துளியும் ஆதாரம் கிடையாது. அவர் கூற்று, வெறும் 'நான்சென்ஸ்'! அந்த வகையில் கடைந்தெடுத்ததாகும்!

# கல்வித் திட்டம் பற்றி கல்வி அமைச்சரின் 'ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்'

—— (:) ——

## மந்திரி பதவியைக் காக்க மன்னிப்புக் கோரல்

### கல்வி குறித்து 'சூன்யம்' என அமைச்சரின் ஒப்புதல்

சென்னை, டிச. 24—

அசெம்பிளியில் கல்வி மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்திற்கு கல்வி மந்திரி சி. சுப்ரமணியம் பதிலளித்துப் பேசியதாவது:—

"கல்வி விஷயத்தில் சர்க்காரின் கொள்கை தெளிவற்றதாக இருக்கிறதென டாக்டர் மேனன் சொன்னார். நானும் அதை ஒப்புக்கொள்கிறேன். எப்படியாயினும் அதைப் பரிசீலித்து நல்ல முடிவுக்கு வரவேண்டும்.

'நான் கல்வி நிபுணனல்ல. ஆனால், அது சாதகமான தே; முன் கூட்டியே ஏற்பட்ட கருத்து இல்லை; நான் திறந்த மனத்துடன் இருக்கிறேன் — காலி உள்ளத்துடனல்ல — காரணம் காட்டுதல், நியாயமான வாதங்களுக்கு இணங்கத் தயார்; ஆனால், மிரட்டலுக்கல்ல," என்றார்.

மேலும் அவர் பேசியதாவது:-

"நாடு சுதந்திரமடைந்த பின்னர், கல்விப் பிரச்சினையைக் கவனித்து, நாட்டின் நலனுக்கேற்ப தக்க திட்டம் வகுக்க வேண்டி வந்தது. மாணவரைச் சரியான மனிதராக்குவதே கல்வியாகும்—படிப்பாகும். இதற்காகப் பயிற்சி அளிக்கவேண்டி வருகிறது. தேசத்தின் உயர்வு நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடவேண்டியது அவசியமாகும். இதுதான் கல்வியின் நோக்கமென்றால் அதை அடைவது எப்படி என்பது அடுத்த பிரச்சினையாகும்.

"முன்பெல்லாம் வசதியுள்ள ஒரு சிலருக்கே படிப்பு என்று இருந்தது. ஆனால் இப்போதோ, எல்லோருக்கும், கல்வி, பொதுவாகத் தேவை என்பதை ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

"ஒருவரைத் தக்க மனிதராக்க புத்தகப் படிப்பு மட்டும் போதுமா? வெறும் புத்தகப் படிப்பு மட்டும் போதாது என்பது உணரப்படுகிறது. நடைமுறையில் பிரத்தியட்சமான நடவடிக்கைகளில் கலந்து கொள்வதும் அவசியமானதாகும்."

"புத்தகப் படிப்பைவிட, நேரில் நடவடிக்கைகளைப் பார்த்துக் கற்றுக் கொள்வது முக்கியமானதென்பது நிபுணர்கள் கருத்து."

"இதை மனதில் கொண்டுதான் முதன் மந்திரி, ஒரு சமயம், பரம்பரை, பெற்றோர்கள் தொழிலை குழந்தைகள் கற்கலாமென்றார். உடனே எதிர்ப்புக் கிளம்பியது. பரம்பரைத் தொழில் இழிவானது என்பதுபோல். செகண்டரி கல்விக் கமிஷனும் பெற்றோர்கள் தொழிலுடன், தொடர்ச்சியாக குழந்தைகளும் பங்கெடுத்துக்கொள்வது, கல்வித் துறையில் பலனளிப்பதாக இருக்குமென்று கூறப்பட்டிருக்கிறது."

"இயற்கையாகவே தொழிலாளிகள், இத்தொழிலைக் கற்றுத் தருவதைத்தான், செகண்டரி கல்விக் கமிஷனும் ஆதரிக்கிறது. ஒரு சிலருக்கு சிந்து நாள் பயிற்சியைப் பெற்றோர்கள் மூலம் கற்றுத்தருவதை விட, தொழிலாளர்கள் மூலம் பயிற்சி அளிப்பதே மேலென, அக்கமிஷன் தன் கருத்தைத் தெரிவித்துள்ளது."

"ஜாதி மனப்பான்மை பிரமையை விட்டால், தொழிலாளர்களைக் கொண்டு நல்ல தரமான தக்கதுமான தொழில்களைப் பயிற்சி அளிப்பதற்கு எதிர்ப்பு எதுவும் இருக்காது. புதிய கல்வித் திட்டம் இதற்கு முயற்சி செய்வதேயாகும்.

"திட்டத்தில் எல்லாம் சரியாக இருக்கிறதென்று நான் சொல்லவில்லை; அபிவிருத்தியே தேவையில்லையென்று சொல்லவில்லை; சட்டசபையைக் கலந்துகொண்டு திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரவில்லை; அங்கத்தினர்களைக் கேட்கவில்லை; — என்பதுதான் திட்டத்தின் குறையென்றால், எங்களை மன்னித்துவிடுங்கள். திட்டத்தைக் கவனியுங்கள்."

'பெரிய அளவில் விஸ்தரிப்பு இருக்கும்போது, எதிலும் தரம் குறையத்தான் செய்யும் இது கல்வி விஷயத்திலும் பொருந்தும்."

"காங்கிரஸ் தேர்தல் வெற்றி, இத்திட்டத்தின்மீது, என்று, வெற்றிபெற்ற மெம்பர் கூறுகிறார். வாக்காளர்கள் இதையே அடிப்படையாகக் கொண்டு வாக்களித்தார்களென்றால், அபிப்பிராயம், பலமாக, இருதரப்பட்டதாக இருப்பதையே இது காட்டுகிறது என்று கூறிவிடலாம். வாக்காளர்கள் தீர்மானமாக எந்தவிதத் தீர்ப்பையும் அளித்துவிடவில்லை: இருபதினாயிரம் பேரில் 11 பேர் மெஜாரிட்டி அதிகமில்லை.

"1953 ஆக. 15-ல் இராமனாதபுரத்தில், 81,795 மாணவர்கள் இருந்தார்கள்; இது, 3,538 பேர் அதிகமென்பதைக் காட்டுகிறது; இதில், 2,643 பேர் பெண்கள், செப். 13-ந் தேதி எண்ணிக்கை 86 268. இது ஐயாயிரத்தி எட்டு அதிகத்தைக் காட்டுகிறது. இதில் 3,051 பேர் பெண்கள். மதுரையில் ஆக. 1-ந் தேதி எண்ணிக்கை 1,58,859 ஆகிறது. இது, செப். 30-ந் தேதி 1,61,711 ஆகியது. இது 9,100 அதிகத்தைக் காட்டுகிறது. இதர மாவட்டங்களில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி இல்லை."

## இந்திய வாசனைப் பொருள்கள்

### உலகமெங்கும் கிராக்கி

புதுடெல்லி, டிச. 25—

இந்திய வாசனைப் பொருள்கள்—முக்கியமாக, கஸ்தூரி, அகர்பத்தி முதலியவைகள் உலக நாடுகளுக்கு ஏராளமாக ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. நாடு சுதந்திரமடைந்த பின்பு, இந்தப் பொருள்களின் ஏற்றுமதிகள் மிகவும் அதிகரித்துள்ளன. 1952—53ல், இதன் ஏற்றுமதி மதிப்பு ரூ. 18 91,389 ஆகும்.

## இந்தியாவில் 3,000 'கோ' சாலைகள்

இந்தியாவில் 3,000 'கோ' சாலைகள் உள்ளனவென்றும், இதில் 6,00,000 கால்நடைகள் இருந்து வருவதாகவும் தெரியப்படுகிறது.

வருகுது அறுவடைத் திருவிழா பாரீர்!

# மதுரை இளைஞர் காங்கிரசார் மீது வழக்கு

மதுரை, டிச. 26—

திராவிட முன்னேற்றக் கழகப் படிப்பகத்தைத் தாக்கி, அதிலிருந்த சாமான்களுக்குச் சேதம் உண்டு பண்ணியதாக இளைஞர் காங்கிரசைச் சேர்ந்த வி. கோபால், எம். வீரையா, எம். அலியார், சுப்பிரமணிய பாரதி, வேலாயுதம், பிச்சம், கிருஷ்ணமாச்சாரி, ஆணிமுத்து உள்பட 28 பேர்கள்மீது தொடரப்பட்டுள்ள ஜாமீன் வழக்கு, 22—12—53-ல், நகர முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் திரு. பி. என். தங்கமணி முன்பு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மதுரை மாவட்டத் திராவிட முன்னேற்றக் கழகத் துணைச் செயலாளர் தோழர் எம். அய்யாச்சாமி, அரசாங்கத் தரப்பில் 4-வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.

அரசாங்கத் தரப்பு வழக்கறிஞர் திரு. ஆர். சுந்தரராச அய்யங்கார் கேள்விகளுக்குப் பதிலளித்துச் சாட்சி கூறியதாவது:-

"நான் பிள்ளையார்பாளையம் தெருவில் வசித்துவருகிறேன்; தெற்குவாசல் நாடார் வித்யாசாலைத் தெருவில் தாளமுத்து—நடராசன் படிப்பகம், முற்போக்கு இளைஞர் மன்றம், காமராசு வாசகசாலை இருப்பது தெரியும்; தாளமுத்து—நடராசன் படிப்பகத்தில் சுமார் நூறு உறுப்பினர்கள் இருக்கிறார்கள்; இவர்கள் தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள்; இளைஞர் முற்போக்கு மன்றத்தில் சகல கட்சிக்காரர்களும் இருக்கிறார்கள்; மதுரை மாவட்ட தி. மு. கழகத்தின் துணைச் செயலாளராக நான் இருந்து வருகிறேன்; தாளமுத்து—நடராசன் படிப்பகம் சுமார் 7-8 ஆண்டுகளாக இருந்து வருகிறது; மார்ச்சு மாதம் 15-ந் தேதி ரீகல் டாக்கிசில் 'ஒரே வழி' என்ற நாடகம் தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்களால் நடத்தப்பட்டது; இந்த நாடகத்தில் நானும், இதர கழக முக்கியமானவர்களும் பங்கு கொண்டிருந்தோம்; அன்று இரண்டு ஆட்டங்கள் நடைபெற்றன. தாளமுத்து — நடராசன் படிப்பகத்தைத் தாக்கிக் கதவுகளை உடைத்தும், சாமான்களைச் சேதப்படுத்தியும் இளைஞர் காங்கிரசுக்காரர்கள் கலகம் செய்வதாக, தோழர் எஸ். முத்து என்னிடத்தில் கூறினார்; இரவு 12 மணி சுமாருக்கு தாளமுத்து—நடராசன் படிப்பகம், முற்போக்கு இளைஞர் மன்றம், இளங்கோ மன்றம் ஆகியவற்றை இவர்கள் தாக்கியுள்ளார்கள்; கழகக் கொடிகளையும் கொளுத்தி விட்டார்கள்; வாசகசாலையில் இருந்த சாமான்கள் எல்லாம் உடைபட்டுக் கிடந்தன; வாசகசாலைக்குப் பக்கத்தில் உள்ள ஓட்டு வீடுகள் முன் பக்கத்தில் சேதப்படுத்தப் பட்டிருந்தன; சில சாமான்கள் எரிக்கப்பட்டும், சில சாமான்கள் வெளியே அக்கி எறியப்பட்டும் கிடந்தன; கழகத்தில் உள்ள முக்கியமானவர்கள், இதைப் பார்த்த பிறகு போலீசில் புகார் செய்தோம்; இவ்விதம் கலகம் நடைபெறுவதற்கு முன்பே கடந்த 4, 5 ஆண்டுகளாக இளைஞர் காங்கிரசாருக்கும், தி. மு. கழகத்தினருக்கும் விரோதம் உண்டு; பலதடவை தி. மு. கழகக் கூட்டத்தில் இளைஞர் காங்கிரசார் குழப்பம் செய்துள்ளனர்; கைகலப்பும் கூட ஏற்பட்டிருக்கிறது. 15-3-53-க்கு முன்பு 4, 5 தடவை இதுபோன்று கைகலப்பு ஏற்பட்டதுண்டு; இதைப் பற்றிப் போலீசில் புகார் செய்துள்ளோம்; செப்டம்பர் மாதம் 20-ந் தேதி 'திராவிட நாடு பிரிவினை நாள்,' கொண்டாடப்பட்டது; நாகர்கோவில் மனோகரன் இதில் கலந்துகொண்டார்; பல இடங்களில் தி. மு. கழகக் கொடி ஏற்றுவிழா நடைபெற்றது; அவர், காரில் செல்லும் போது, அவரைப் பின் தொடர்ந்து சிலர் நடந்தும், சைக்கிள் மூலமும் சென்றனர்; தெற்கு மாசி வீதியும், மேல மாசி வீதியும் சந்திக்குமிடத்தில் தோழர் மணிமுடி என்பவரைச் சிலர் அடித்து, மண்டையை உடைத்து விட்டனர்; அந்தச் சமயம் நான் வீட்டிலிருந்து வந்து கொண்டிருந்தேன்; தோழர் மணிமுடியை அடித்துப் போட்டுவிட்டதாகச் சிலர் என்னிடத்தில் சொன்னார்கள்; நான் குற்ற இலாகா போலீசுக்குச் சென்று, போலீசாருடன், சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வந்தேன்; கழகத்தைச் சேர்ந்த சிலர், தோழர் மணிமுடிக்குத் தண்ணீர் தெளித்து, மயக்கத்தைப் போக்கிக் கொண்டிருந்தனர்; அவரை வைத்தியசாலைக்கு அனுப்பிவிட்டு, நான், போலீசில் இது சம்பந்தமாகப் புகார் செய்தேன்; அக்டோபர் 3-ந் தேதி, நேரு மதுரைக்கு வந்தார்; தல்லா குளம் அருகே சுமார் 3000 பேர்களடங்கிய தி. மு. கழகத்தினர் நேருவிற்குக் கருப்புக் கொடி பிடித்தனர்; சிலர் எங்கள் கழகத்தினரை அடித்தனர்; அப்படி அடித்துக் கலகம் செய்தவர்களில் வேலாயுதம் என்பவர் இருந்தார்; எங்களில் சிலரையும், இளைஞர் காங்கிரசில் சிலரையும், போலீசார், லாரியில் ஏற்றிச் சென்றனர். 5—10—53-ந் தேதி, மீண்டும் தோழர் மணிமுடியைச் சில இளைஞர் காங்கிரசார் துரத்திச் சென்று தாக்க முயன்றனர்; அவர், கிருஷ்ணன்கோவில் தெருவில் உள்ள ஒரு வீட்டில் ஒளிந்து கொண்டார்; பின்னர், போலீசார் வந்து பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர்; பின்னர், வெங்கலக் கடைத் தெருவில் உள்ள தோழர் கிருஷ்ணசாமி என்பவரை வெட்டினார்கள்; இளைஞர் காங்கிரசாருக்கும், தி. மு. கழகத்தினருக்கும் விரோதம் இருந்ததே இச் சம்பவத்திற்குக் காரணம்; 5—10—53-ந் தேதிக்குப் பின்னர் எந்தவிதமான சம்பவமும் நடைபெறவில்லை."

## குறுக்கு விசாரணை

சாட்சியை எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் திரு. கே. லெட்சுமி நரசிம்மன் குறுக்கு விசாரணை செய்தார். அதுபோது சாட்சி கூறியதாவது;-

"1949-ல் தி. மு. கழகம் தொடங்கப்பட்டது; தொடக்க முதல் நான் அதில் செயற்குழு உறுப்பினராக இருந்து வருகிறேன்; அதற்கு முன்பு திராவிடக் கழக உறுப்பினராக இருந்து வருந்தேன்; யுத்த காலத்தில், தேசிய யுத்த முன்னணியில் நான் ஒரு பிரசாரகராக வேலை செய்து வந்தேன்; மூன்று நாலு காலிற்கு ஜமீனியாக இருந்து வந்தேன்; யுத்தத்திற்கு ஆதரவாக பொது மக்களிடத்தில் வேலை செய்வதும், அதற்காகப் பிரச்சாரம் செய்வதும் எனது வேலை; அதற்காக 60 ரூபாய் சம்பளமாகப் பெற்று வந்தேன்; இவ்விதம் 4, 5 ஆண்டுகள் இருந்தேன்; அப்போது காங்கிரசுக்காரர்கள் சிறையில் இருந்தார்கள்; காங்கிரசுக்கு எதிராகப் பேசியதில்லை; தனிப்பட்ட முறையில் காங்கிரசின் கொள்கைகள் எனக்குப் பிடித்திருக்கவில்லை; நகரில் தி. மு. கழகத்திற்கு 2,000 பேர் உறுப்பினர்கள் உண்டு; பலர் அதில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டு வேலை செய்வார்கள்; காங்கிரஸ் அரசாங்கத்தை அகற்றிவிட்டு, தி. மு. கழகத்தின் அரசாங்கத்தை நிறுவ வேண்டுமென்பது எங்கள் நோக்கமல்ல; பொது மக்களுக்கு நன்மை செய்தால் காங்கிரசையே நாங்கள் ஆதரிக்கிறோம்; காங்கிரசின் கொள்கைகள் ஓரளவு தெரியும்; நேரு எழுதிய புத்தகம் படித்திருக்கிறேன்; சி. ராசகோபாலாச்சாரியார் பேசிய கூட்டத்திற்கு எங்கள் கட்சியைச்சேர்ந்த 2,000 உறுப்பினர்கள் சென்றிருந்தோம்; அவரால் கொண்டுவரப்பட்ட புதிய கல்வித் திட்டம் எங்களுக்குப் பிடிக்காததால், கூட்டமாகச் சத்தமில்லாமல் எழுந்துவிட்டோம்; இதைத் திட்டம் போட்டே செய்தோம்; கழகக் கொள்கைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கக் கூடியவர்கள் நிறைய இருக்கிறார்கள்; வேறு காங்கிரஸ் கூட்டங்களுக்குச் செல்வதில்லை என்றாலும், "புதிய கல்வித் திட்டத்தை எதிர்க்கிறோம்' என்பதைக் காட்டவே, நாங்கள் எழுந்திருந்து வந்தோம்; சத்தம் போடவில்லை; கொடி பிடிக்கவில்லை; 'எழுந்து போகிறோம்' என்று ராஜாஜியிடம் சொல்லவில்லை."

"கடைசியில், தோழர் ரத்தினம் என்பவரைத் தவிர வேறு யாரும் சம்பவத்தில் இல்லை; இளைஞர் காங்கிரசில் யார் யார் இருக்கிறார்கள், அதன் கிளைகள் எத்தனை இருக்கின்றன என்பது தெரியாது; இளைஞர் காங்கிரசாரின் நடவடிக்கை எங்களுக்குப் பிடிக்கவில்லை; இளைஞர் காங்கிரசாருக்கு ஆதரவு உண்டு என்பதற்காகப் பொறுமை கொண்டதும் கிடையாது; அவர்கள் செல்வாக்கைக் குறைக்க நாங்கள் முயன்றதில்லை; அதைப் பற்றிக் கவலை பட்டதும் கிடையாது; எங்கள் கொள்கைகளைப் பொது மக்களிடத்தில் பிரச்சாரம் செய்வதுதான் வேலை; பலாத்கார நடவடிக்கையில் இறங்கியது கிடையாது; போலீசாருக்குத் தெரியப்படுத்திவிட்டே நேருவுக்கு கருப்புக் கொடி பிடித்தோம்; அதில் ஒருவர், இருவர் கருப்புக் காகிதத்தை வீசி எறிந்திருக்கலாம்; அவ்விதம் அவர்கள் செய்வார்கள் என்பது கூடத் தெரியாது; கருப்புக் கொடி பிடிக்கும்போது எங்கள் அருகே பல ஆயிரக்கணக்கான பொது மக்கள் இருந்தார்கள்; அவர்கள் எங்களுக்கு ஆதரவோ, எதிர்ப்போ செய்யவில்லை; கழக முக்கியஸ்தர்களின் தலைமையில் கருப்புக் கொடி காட்டப்பட்டது; ஒரு ஆண்டு காலத்திற்கு முன்பு தோழர் மணிமுடி, இளைஞர் காங்கிரஸ்காரர் ஒருவரைக் காயப்படுத்தி விட்டார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்; இளைஞர் காங்கிரஸ் காரர்கள் மீது போலீசில் சுமார் 15 தடவைகள் புகார் செய்திருக்கிறேன்."

இத்துடன் இன்றைய விசாரணை முடிந்தது. மீண்டும் ஜனவரி மாதம் 6-ந் தேதி விசாரணை நடைபெறும்.

---

## எழுத்தறிவிப்பு இயக்கம்

சென்னை, டிச. 25—

சமுதாயத் திட்டத்தின் ஆதரவில் குழந்தைகள், பெரியவர்கள், முதியவர்கள் இவர்களுக்கான 'எழுத்தறிவிப்பு இயக்கம்' மகாபலிபுரத்தில் சென்னை சர்க்காரால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

---

## திருச்சி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்

### ஐவருக்கு வரவேற்பு அளிக்க முடிவு

12—12—53-ல், திருச்சி சிந்தாமணி கிளைக் கழக அலுவலகத்தில், தோழர் எ. பி. தர்மலிங்கம் தலைமையிலும், தோழர் கருணாநிதி முன்னிலையிலும் மாவட்ட செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அது சமயம் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :—

1. அத்துக்குடி, கல்லக்குடி ஆகிய இடங்களில் ஜூலை 15-ம் நாள் அரசாங்கத்தினர் துப்பாக்கிப் பிரயோகத்தால் உயிர் நீத்த தோழர்களுக்கு வீரவணக்கம் செலுத்துவதோடு, அவர்கள் குடும்பத்தாருக்கு இக்கூட்டம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

2. தமிழ்ப்பெரியார் திரு வி. கல்யாணசுந்தரனார், சுதந்திர பாண்டியனார் மனைவி, மாவட்ட செயற்குழு உறுப்பினர் தோழர் இளமுருகு - பொற்செல்வி அவர்கள் தாயார், மலைக்கோட்டை கழக முன்னணி வீரர் தோழர் டி. எம். ரெத்தினம் அவர்கள் தந்தையார் ஆகியோர் மறைவுக்கு இக்கூட்டம் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

3. 8—1—54 அன்று திருச்சியில் தோழர்கள் அண்ணாதுரை, நெடுஞ்செழியன், மதியழகன், சம்பத், நடராசன் ஆகியோருக்கு வரவேற்பும், பாராட்டுக் கூட்டம் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

தோழர் கருணாநிதி அவர்கள், கழக எதிர்கால வேலைத் திட்டங்கள் பற்றியும், கழகக் கட்டிடத்தின் நிலை பற்றியும் விளக்கவுரையாற்றியபின், ஜனவரி 15-ந் தேதிக்குமேல் வட்டக் குழு அமைக்கவேண்டிய அவசியம் பற்றியும், தோழர் கருணாநிதி மாவட்டத்தில் சுற்றுப் பிரயாணம் செய்வது பற்றியும், கழக வளர்ச்சி பற்றியும் பேசியபின் இரவு 7 மணிக்கு கூட்டம் முடிவுற்றது.

---

## தொளார் தி. மு. கழகம்

தொளார், டிச. 24—

20—12—53ல், தோழர் இளையபெருமாள் தலைமையில், தி. மு. கழகக் கட்டிடத்தைத் தோழர் மு. ஆதிமூலம் திறந்து வைத்தார் தோழர் இளையபெருமாள் கழகக் கொடியை ஏற்றிவைத்தார். அதுபோது, கழகக் கட்டிடத்தில், தோழர் அண்ணாதுரையின் உருவப் படத்தைத் தோழர் வே. கோவிந்தசாமி திறந்து வைத்து, அவருடைய உழைப்பு, தி. மு. கழகம் அடைந்திருக்கும் வெற்றி ஆகியவற்றைப் பற்றி பேசினார்.

பின்னர், கழகக் கட்டிடத்தில் "அண்ணா நூல் நிலையம்" ஒன்றை தோழர் வ. சின்னத்தம்பி திறந்து வைத்தார்.

---

## பழனி வட்டார தி. மு. கழகப் பொதுக் குழு

19—12—53ல், தி. மு. கழகப் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. 30—1—54ல், இங்கு வரவிருக்கும் தோழர் மு. கருணாநிதியை சிறப்பான முறையில் வரவேற்கவும், அத்துக்குடி, கல்லக்குடி வழக்குக்கு நிதி அளிக்கவும், வரவேற்புக்காக தொண்டர் படை அமைக்கவும் திட்டங்கள் வகுக்கப்பட்டன.

---

## பனை வெல்லம் உற்பத்தி

### மத்திய சர்க்கார் நிதி உதவி

மத்திய சர்க்கார், 1953-54-ல் பனை வெல்ல உற்பத்தி அபிவிருத்தித் திட்டங்களுக்காக பல்வேறு மாநிலங்களுக்கும் சகாயத் தொகை வழங்க உணவு உற்பத்திப் பெருக்க நிதிகளிலிருந்து 5 லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளனர்.

இந்தத் தொகையிலிருந்து இதுவரை மொத்தம் சுமார் 3.70 லட்சம் ரூபாய் சகாயத் தொகையாக பல்வேறு ராஜ்யங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது; இதில் சென்னைக்கு (ஆந்திராவும் உள்பட) 1,93,400 ரூபாயும், மேற்கு வங்காளத்துக்கு, 72,450 ரூபாயும், பீகாருக்கு 23,475 ரூபாயும், ராஜஸ்தானுக்கு 20,485 ரூபாயும் அஜ்மீருக்கு 20,450 ரூபாயும்; திருவாங்கூர்-கொச்சிக்கு 20,150 கிடைத்திருக்கிறது.

1952—53-ல் மொத்தம் 850 க்கும் அதிகமான ஸ்தலங்களில் பனைவெல்ல உற்பத்தி முறையில் பயிற்சியளிக்கப்பட்டு வந்தது. அவற்றுள் சுமார் 720 பயிற்சி இடங்கள் சென்னை ராஜ்யத்தில் இருந்தன. சென்னை ராஜ்யத்தில சுமார் 4,730 பேர்களும், திருவாங்கூர்—கொச்சியில் 1,375 பேர்களும் உள்பட மொத்தம் சுமார் 7000, நபர்கள் இந்த பயிற்சி இடங்களில் பனை வெல்ல உற்பத்தி முறையில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர்.

1952-ம் ஆண்டில், இந்தியா முழுவதிலும் உற்பத்தி செய்யப்பட்ட பனை வெல்லத்தின் மொத்த அளவு 55,000 டன்னுக்கும் அதிகமாக இருக்குமென்று மதிப்பிடப்படுகிறது.

---

## வேலூர் (சேலம்) தி. மு. கழகம்

20—12—53ல், வேலூரில் நடைபெற்ற நாமக்கல் வட்ட தி. மு. கழக செயற் குழுக் கூட்டத்தில் ஜனவரியில் பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்களை அழைத்து, அத்துக்குடி சதி வழக்கு நிதிக்காக ரூ. 500 கொடுப்பதென்றும், வட்டக் கழக நிதிக்காகக் கூடிய விரைவில், நாமக்கல்லில் ஒரு நாடகம் நடத்துவதென்றும், வேலூர் சுற்று வட்டாரத்தில் வெற்றிலைக் கொடிகள் காய்ந்தின் விளைவாக மூன்று ஆண்டு காலமாக விவசாயிகள் அல்லலுறுவதை சர்க்காருக்கு எடுத்துக் காட்டியும், அந்நிலையைப் போக்குவதற்கு 'மாதிரி பண்ணை'யை ஆரம்பிக்க வேண்டுமெனக் கோரியும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வட்டக் குழுவிற்குத் தோழர்கள் என். பி. வடிவேலு, அங்கமுத்து, வி. எ. ராமநாதன் ஆகியோர் முறையே தலைச் செயலாளர், பொருளாளர், மாவட்டப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். (ந. கி.)

---

## மஜீத் ஞாபகார்த்த கால் பந்தாட்டக் கழகம்

அத்துக்குடி, டிச. 24—

20—12—53ல், மேற்படி கழக உறுப்பினர் கூட்டம் வடக்கு அழகிரி திடலில், தோழர் ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. அது சமயம், தோழர்கள் கணபதி தலைவராகவும், திருமுகம் துணைத் தலைவராகவும், டேவிட் செயலாளராகவும், ஆழ்வார் பொருளாளராகவும், மற்றும் செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

---

# வாங்குவீர் கைத்தறி என்றுரைப்பீர்!

# வட ஆற்காடு மாவட்டத் தோழர்களின் அல்லல்!

## 18 வாயிதா—வழக்கு மேலும் ஒத்திவைப்பு!

அரக்கோணம், டிச. 26—ரயில் நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட வட ஆற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் ஏ. எஸ். கி. கிருஷ்ணசாமி உட்பட 23 தோழர்கள்மீது தொடரப்பட்ட வழக்கு 24-12-53ல், அரக்கோணம்சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. போலீசார் வராததால், வழக்கு, 6—1—54-க்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கில் ஈடுபட்டுள்ளவர்கள் 100 மைல் தூரத்திலிருந்து சைக்கிளில் வந்து செல்கிறார்கள் என்றும், ஆனால், அந்த ஸ்தலத்திலேயே இருக்கும் போலீசார் வருவதில்லையென்றும், இது வழி வாங்கும் நோக்கத்தோடு நடத்தப்படுகிறது என்றும், எனவே, வழக்கை உடனடியாக விசாரிக்க வேண்டுமென்றும் தோழர்கள் வாதாடினர்.

அடுத்த வாயிதாவில் கட்டாயம் விசாரிப்பதாகவும், போலீஸ் தரப்பினருக்கு சம்மன் அனுப்புவதாகவும் மாஜிஸ்திரேட் கூறினார். (ந. நி)

# பெரியா: சில குறிப்புகள்:

மாஸ்கோ, டிச. 24—சோவியத் ரஷ்யாவின் சீனியர் உதவிப் பிரதமராக இருந்தவரும், சுமார் இருபது ஆண்டுகளுக்கு அதிகமாக ஸ்டாலினின் நெருங்கிய சகாவாக உழைத்தவருமான 53 வயதுடைய பொதுவுடமைக் கட்சி உலகப் பிரதமர் லவ்ரெண்டி பெரியா, மரணத் தீர்ப்பு விதிக்கப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டார் என்ற செய்தி மாஸ்கோ நகரில் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது.

அவருடன் குற்றம் சாட்டப்பட்டிருந்த அவரது சகாக்களெனப்படும் இதர ஆறு பேர்கள் மீதும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

அவர்களது சொத்துக்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்படவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும் நேற்றிரவு அதிகாரப்பூர்வமான தகவல் வெளியிடப்பட்டது.

தேசத்துரோகம் செய்ததாக அவர்களுக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

பெரியா, தான் குற்றவாளி என ஒப்புக்கொண்ட ஆறு தினங்களுக்குள் அவருக்கு மரணத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. கோர்ட்டாரால் தீர்ப்பளிக்கப்பட்ட உடனேயே அவர் சுடப்பட்டார்.

இச்செய்தி அறிவிப்பு சோவியத் ரஷ்யப் பத்திரிகைகளில் மூன்றே வரிகளில் அடங்கியிருந்தது.

டிசம்பர் 18-ந் தேதிக்கும் அன்றைய தினத்திற்குமிடையே மார்ஷல் கோனிவ் தலைமையில், சோவியத் சுப்ரீம் கோர்ட் விசேட விசாரணை நடத்தி, இத்தண்டனையை விதித்துள்ளது என்று ரஷ்ய பத்திரிகைகள் அறிவிக்கின்றன.

மிகப் பெரிய பயங்கர சதிக் குற்றங்கள் செய்ததாகவும், கொடூரமான சோவியத் எதிர்ப்புச் சதியில் ஈடுபட்டதாகவும், அனைவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டனரெனவும் செய்திகள் கூறுகின்றன.

விசாரணைக்குப் பின்னர், உடனடியாகத் தண்டனை நிறைவேற்றப் பட்டிருக்கலாமெனவும் பத்திரிகை அறிவிப்பு கூறுகிறது.

"தண்டனை மேற்கொள்ளப்பட்டது" என்ற தலைப்பில், இந்த அறிவிப்பு வெளியாகியிருக்கிறது.

தாய் நாட்டுக்குத் துரோகம் செய்யவும்; வெளிநாட்டு மூலதன நலனுக்காக செயலாற்றவும், எதிரி பெரியா, சோவியத் நாட்டுக்கு விரோதமாகவுள்ள துரோகக் குழுவுடன் சேர்ந்து கொண்டதாக கோர்ட் உறுதி செய்தது.

ஸ்டாலின் மறைவுக்குப் பின், ரஷ்ய சீனியர் உதவிப் பிரதமர் பதவிக்கு வந்த பெரியா, சோவியத் அரசியலிலும், பொதுவுடமைக் கட்சியிலும் பெரும் சக்தியாகக் கருதப்பட்டு வந்தார்.

ஆனால், பின்னர் நடைபெற்ற சோவியத் பொதுவுடமைக் கட்சியின் மத்தியக் கமிட்டிக் கூட்டத்தில், கட்சியிலிருந்து பெரியாவை விலக்க முடிவு செய்யப்பட்டது. அந்நிய மூலதன நலனைக் கருதி, சோவியத் நாட்டினைக் குலைக்கும் பொருட்டு, பெரியா, கிரிமினல் நடவடிக்கைகளிலும், தேச விரோத சதிவேலைகளிலும் ஈடுபட்டார் என்று கூறப்பட்டது.

சோவியத் இரகசியப் போலீசான பயங்கர என். கே. வி. டி. ஸ்தாபனத்தின் தலைவராக இருந்தவர் பெரியா. ஸ்டாலினின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஆட்களில் ஒருவராகவும், ரஷ்ய அரசியலில் மிகவும் சக்தி வாய்ந்தவராகவும் பெரியா இருந்து வந்ததால், இவர் மாலன்கோவுக்குப் போட்டியாக வரலாமென்று முன்னரே கூறப்பட்டு வந்தது.

இவர் டிஸ்மிஸ் செய்யப்பட்ட செய்தி ஜூலை 10-ந் தேதி வெளியாகியது.

## தொழிலாளர்களுக்கு விடுதிகள்

சென்னை, டிச. 25—சென்னை சர்க்கார் 1953-54ல், இருபத்தைந்து லட்சமும், 1954—55க்கு ஒரு கோடி ரூபாயும் கடன் உதவியளிக்கும்படி இந்திய சர்க்காரைக் கேட்டுக் கொண்டுள்ளது.

சென்னை, கோவை, மதுரை ஆகிய நகரங்களிலுள்ள கைத்தொழில் தொழிலாளர்களுக்கு விடுதிகள் கட்டித் தரவே இத்தொகை கேட்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ஒவ்வொன்றும் ஒரு மாடி உள்ள விடுதியாக இருக்கும் என்றும், ஒன்றைக் கட்ட ரூ. 2,750 ஆகும் என்றும், பெரம்பூரில் ஆயிரம் விடுதிகள் முதலில் கட்டப்படும் என்றும் தெரிகிறது.

கோவை, மதுரை ஆகிய இடங்களில், தொழிலாளர்கள் விடுதிகள் கட்டுவதற்கான திட்டங்களை தயாரிக்கும்படி தொழில் கமிஷனர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். 1955-க்குள் சென்னை, மதுரை, கோவையில் 4,545 விடுதிகள் கட்டப்படும்.

## தொழிலாளர் பகுத்தறிவு படிப்பகம்

திருப்பூர், டிச. 23—19—12—53ல், நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் 3 மாத அறிக்கை வாசிக்கப்பட்டு, வரவு-செலவு கணக்கு சரிபார்க்கப்பட்டது. 'திராவிட நாடு' படத்தை தோழர் எம். பி கோவிந்தசாமி, திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றினார். பின்னர், தோழர்கள் கே. ராமசாமி, தலைவராகவும்; பி. ஜே. ராசு துணைத் தலைவராகவும்; துரைசாமி செயலாளராகவும்; கிட்டப்பன், குப்புசாமி துணைச் செயலாளராகவும்; கே. பி. ராமசாமி, பொருளாளராகவும்; வி. நாச்சிமுத்து நூல் நிலைய நிர்வாகியாகவும்; பி. பெரியசாமி, என். பழனிசாமி ஆகியோர் நிர்வாகக் குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## ஈ. வெ. கி. சம்பத் சுற்றுப் பயணம்

★

டிசம்பர் 27: சேலம்

டிசம்பர் 28: அரூர்

காலை 11 மணிக்கு வரவேற்பு நகரான் மைக் கழக வரவேற்பு. மாலை 5 மணிக்கு பொதுக் கூட்டம்.

ஜனவரி 2; லால்குடி

காலை, கல்லக்குடி அப்பாக்கி பிரயோகத்தில் மாண்ட நடராசன் படத் திறப்பு மாலை 6 மணிக்கு பொதுக் கூட்டம்.

## தி. மு. கழக சிறப்புக் கூட்டம்

★

27—12—53 ஞாயிறு காலை 10 மணிக்கு, அம்மாப்பேட்டை ஜோதி டாக்கீசில், தோழர் வி. சிவப்பிரகாசம், பி. ஏ., அவர்கள் தலைமையில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்படும்.

## கோவை மாவட்ட கிளைக் கழகங்களுக்கு

★

"நமது மாவட்டச் சார்பில் தூத்துக்குடி சதிவழக்கு நிதிக்கு, குறைந்தது 2000 ரூபாயாவது தரவேண்டுமென பொதுச் செயலாளர் பணித்துள்ளார்கள்.

ஆகவே, விரைவில் கோவை மாவட்டத்தில் உள்ள கழகங்கள் அனைத்தும், இப்பணியை முடிக்க ஆவன செய்வதோடு, வசூலிக்கும் தொகைகளை எனது முகவரிக்கு அனுப்பி வைத்து, அதன் கணக்கு விவரத்தைத் தலைமை நிலையத்திற்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறேன்.

தொகை கணிசமான அளவுக்கு சேர்ந்தபின், நமது மாவட்டத்திற்குப் பொதுச் செயலாளர் அவர்களை வரவழைத்து நிதி அளிப்பு விழா நடத்த ஏற்பாடு செய்ய எண்ணியுள்ளேன்.

கழகத் தோழர்கள் இப்பொறுப்பை செவ்வனே செய்து முடிக்குமாறு வேண்டுகிறேன்," என, கோவை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அறிவிக்கிறார்.

## ஈசுவரி—கிருஷ்ணன்

27—12—53 ஞாயிறு காலை 8 மணி முதல் 9 மணிக்குள் கா. அப்பாதுரை, எம். ஏ. எல். டி., அவர்கள் தலைமையிலும் தோழர்கள்: எ. கே. வேலன், நாரண-துரைக்கண்ணன் முன்னிலையிலும், தோழர் பி எ கிருஷ்ணனுக்கும், தோழியர் ஈசுவரிக்கும் திருமணம் நடைபெறும்.

இடம்:— 16, தெற்கு மாட வீதி, வள்ளிய சத்திரம், மயிலாப்பூர்.

## கவுண்டம்பட்டியில் தி. மு. கழகத் துவக்கம்

குளித்தலை தாலுகா கவுண்டம்பட்டி கிராமத்தில் 24—11—53ல், தி. மு. கழகம் துவக்கப்பட்டு, தோழர்கள் க. முத்து செயலாளராகவும், (மா. பி), இரா. அடைக்கலம் துணைச் செயலாளராகவும், கு. சண்முகம் பொருளாளராகவும், மற்றும் மருதமுத்து, பொ. மாணிக்கம், இரெ. சண்முகம், ப. கலைச்செல்வன், க. முத்துவீரன், ச. மாணிக்கம் ஆகியவர்களைச் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

## மதுரையில் பொதுச்செயலாளர்

★

தி. மு. கழகப் பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில், மதுரை பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்வாரென, மதுரைத் தோழர் எஸ். முத்து அறிவிக்கிறார்.

## மு. கருணாநிதிக்கு வரவேற்பு

★

செங்கற்பட்டு

28—12—53 திங்கள் மாலை 5 மணிக்கு, செங்கற்பட்டு தர்க்கா மைதானத்தில், கல்லக்குடி அறப்போர் தலைவர் தோழர் மு. கருணாநிதிக்கு வரவேற்பு அளிக்கப்படும். தோழர் ஏ. கோவிந்தசாமி, எம் எல். ஏ., தோழர் டி. வி நாராயணசாமி மற்றும் பலர் பேசுவார்கள்.

பழனி

30—1—1954 சனிக்கிழமை, தோழர் மு. கருணாநிதிக்கு பழனியில் வரவேற்பும், பாராட்டுக் கூட்டமும் நடைபெறும்.

தூத்துக்குடி, கல்லக்குடி வழக்குகளுக்கு நிதி அளிக்கப்படும்.

## எட்டிக்குப் போட்டிய ஒல்...!

பெர்லின், டிச. 25—தென்கிழக்கு ஆசிய மார்க்கெட்டுகளைக் கைப்பற்ற இந்தியா, ஜப்பான், பிரிட்டன் ஆகியவைகளுடன் போட்டியிட ஜெர்மன் அணி உற்பத்தியாளர்கள் முயன்று வருகின்றனர்.

## புதிய கல்வித் திட்டம்

### ஆராய மீண்டும் நிபுணர் குழு

ஆந்திர மாநிலப் பிரதமரின் அறிவிப்பு

குண்டூர், டிச. 26—சி. ஆர். அவர்களின் புதிய தொடக்கக் கல்வித் திட்டத்தைக் குறித்து, ஆந்திர சர்க்காரின் கருத்தை விளக்கிக் கூறிய பிரதமர் பிரகாசம், புதிய திட்டத்தை ஆராய்ந்து முடிவு கூறுவதற்காக ஒரு நிபுணர் குழுவைக் கூடிய விரைவில் நியமிக்க இருப்பதாக அறிவித்தார்.

புதிய திட்டத்தைத் தாம் இன்னும் நன்கு படிக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

## மறுமலர்ச்சிக் கழகம்

மதுரை, டிச, 24—5—12—53ல், தோழர் கு. கார்வண்ணன் தலைமையில் நடைபெற்றச் செயற் குழு கூட்டத்தில், பொங்கற்குழு அமைக்கப்பட்டது. செயலாளர்: அ. ரெங்கநாதன்; துணைச் செயலாளர்: ஆ முத்து; பொருளாளர்: மா. இரா. மணியன்; மற்றும் 14 செயற் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## "நெடுமாறன்"

சேர்ப்பனேந்தல் தோழர் எஸ். தேவராசுக்கு 17-12-53ல், ஆண் மகவு பிறந்தது. குழந்தைக்கு 'நெடுமாறன்' என பெயரிடப்பட்டது. அதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது — வரப்பெற்றோம் — நன்றியுடையது— பொறுப்பாளர்.

# சி. ஆர். எதிர்ப்பாளர்களுக்கு 'தினமணி'யின் மறைமுகத் தூற்றல்!

## "எருமைக்குள்ள நன்றியும் இல்லையே" என்று நையாண்டி!

"எருமை மந்தப் புத்தியுள்ளது என்று சொல்வார்கள்; ஆனால், அது நன்றிகெட்டதல்ல. பீகாரிலிருந்து இதை ருசுப்பிக்கும் செய்தி ஒன்று வந்திருக்கிறது. தர்பங்கா கிராமமொன்றில், ஒரு மனிதனை காட்டுப் பன்றி மடக்கியது. அதன் மூர்க்கத்தனமான தாக்குதலைத் தாங்காமல், உதவியைக் கோரிய வண்ணம் அவன் கீழே விழுந்தான். தூரத்தில் மேய்ந்து கொண்டிருந்த எருமை ஒன்று, அபயக் குரலைக் கேட்டு விரைந்து ஓடிவந்து, காட்டுப் பன்றியை எதிர்த்துப் போரிட்டு, தன் கொம்புகளால் குத்திக் கொன்று மனிதனைக் காப்பாற்றியது. இந்த மிருகம் காண்பித்த நன்றி இணையற்றது. இது வரை நாயின் நன்றி விசுவாசம்தான் பிரசித்தமாக இருந்தது. பீஹார் ஒருமையின் சாதனை அதை மிஞ்சி விட்டது. மனிதன் சுலபமாக நன்றி கெட்டவனாகி விடுகிறான். ஆனால், அவன் வளர்க்கும் பிராணிகள், அவனைவிட உயர்ந்த பண்புடையவை என்பதை இந்த மிருகம் நிரூபித்து விட்டது."

—இவ்வாறு 26—12—53-ந் தேதிய 'தினமணி' இதழ் அனைத் தலையங்கம் தீட்டியிருக்கிறது, 'மனிதனும் மிருகமும்' என்ற தலைப்பில்!

## 'ராஜப் பிரமுகர் பதவியை ரத்து செய்ய வேண்டும்'

எம். பி.-க்கள் தீர்மானம்

புதுடெல்லி, டிச. 25—'பி', 'சி' பிரிவு மாநிலங்களைச் சேர்ந்த பார்லிமெண்ட் அங்கத்தினர்களின் கூட்டம், இன்று மாலை கான்ஸ்டிடியூஷன் கிளப்பில் நடைபெற்றது.

அதிகச் செலவு காரணமாக இருப்பதும், ஜனநாயகத்திற்கு விரோதமானதுமான 'ராஜப் பிரமுகர்' பதவியை ரத்து செய்யுமாறும், இப்பதவி நாட்டின் ஜனநாயக அமைப்பிற்கு ஒத்ததாக இல்லையென்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## 'பரப்பிரம்மம்' நாடகம்

திருத்தங்கல், டிச. 24—இவ்வூர் மறுமலர்ச்சி நாடக மன்றத்தாரால், 16—12—53ல், "பரப்பிரம்மம்" என்ற நாடகம் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி தலைமையில் நடந்தது. அவ்வமயம் தூத்துக்குடி சதி வழக்கு நிதிக்காக ரூ. 21 ஆசைத்தம்பி வசம் அளிக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத் அக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், ஆழ்வின் அச்சகத்தில் அச்சிடப்பெற்று (16, குறிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: இ. என். அண்ணாதுரை. எம். ஏ.